அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 254

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு - 07
06 ஜூன் 1984.

எல்லா அமைச்சுகளின் செயலாளர்களுக்கும்
திணைக்களத் தலைவர்களுக்கும்.

1980 ஜூலையில் பதவிகளை விட்டு விலகிய உத்தியோகத்தர்
பதவி ஏற்றங்கள்

குறிப்பிட்ட தொகு காலப்பகுதியில் தமக்குரிய எல்லா சம்பள ஏற்றங்களையும் ஒழுங்காகப் பெற்றிருக்க வேண்டும் என்பதும்/ அல்லது குறிப்பிட்ட கால எல்லையுள் குற்றச் செயல் ஒன்றைப் புரிந்ததற்காகத் தண்டிக்கப்பட்டவராயிருத்தலாகாதென்பதும் குறிப்பிட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பதவி ஏற்றங்களை வழங்குவதற்குரிய தேவையெனக் கருதப்படும்.

02. மீளப் பதவியில் அமர்த்தப்பட்ட ஒரு உத்தியோகத்தர் 1980 ஜூலையில் பதவியை விட்டு விலகிய காரணத்திற்காகப் பதவி ஏற்றங்களைப் பெறுதற்குத் தகுதியுடையவரல்லர் என சில திணைக்களத் தலைவர்கள் கருதுகின்றனர். மேலும் 1980 ஜூலையில் பதவியை விட்டு விலகியவர்களெனக் கருதப்படும் உத்தியோகத்தர்களை இந்தச் சுற்றறிக்கையின் 1-ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள தேவைகள் எங்ஙனம் பாதிக்கும் என்பது பற்றியும் விசாரிக்கப்படுகிறது. இது பதவியை விட்டு விலகிய உத்தியோகத்தர் எந்த ஏற்பாடுகளின் பிரகாரம் மீள வேலைக்கமர்த்தப்பட்டனரோ அதில் தங்கியுள்ளது. இந்த ஏற்பாடுகளாவன அமைச்சரவையின் தீர்மானத்தின் பேரில் அமைந்ததும் 03.12.80 ஆம் தேதிய அ ம ப 410/80 ஆம் இலக்க அமைச்சரவைச் செயலாளரினால் அனுப்பப்பட்டதுமான அறிவுறுத்துரைகளில் காணப்படுகின்றன.

03. அறிவுறுத்துரைகளின் 4(1)-ஆம் பந்தியின் கீழ் அல்லது 7 (1) ஆம் பந்தியின் கீழ் ஒரு உத்தியோகத்தர் மீள வேலைக்கமர்த்தப்பட்டிருப்பாரேல் அவர் 1980 ஜூலையில் பதவியை விட்டு விலகினார் என்பதை விட வேறு வகையில் தகைமையற்றவராயிராவிடத்து, இந்தச் சுற்றறிக்கையின் 1-ஆம் பந்தியின் தேவைகள் அவரைப் பதவியேற்றத்திற்குத் தகுதியற்றவராக்கா.

ஒப்பம்: டி. பி. ஜே. பி. எஸ். சிறிவர்தன
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

நஸீ/06